## குளித்தலை சட்டமன்றத் தொகுதி முழுவதையும்

# காவிரி டெல்டா மண்டலத்தில் இணைத்திட வேண்டும்!

## சட்டப்பேரவையில் உணவு – கூட்டுறவுத்துறை மானிய விவாதத்தில் குளித்தலை அ. சந்திரன் பேச்சு!

சென்னை,ஆக.25-
சட்டப்பேரவையில் உணவு மற்றும் கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை விவாதத்தில் சூரியனூர் அ. சந்திரன் பேசுகையில, குளித்தலை சட்டமன்றத் தொகுதி முழுவதையும் காவிரி டெல்டா மண்டலம் முழுவதையும் இணைத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பரேவையில் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானிய விவாதத்தில் சூரியனூர் அ.சந்திரன் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே,

சுயமரியாதைச் சுடர், பகுத்தறிவுப் பகலவன்.. எனக்கு தோன்றியதை சொல்கிறேன் உனக்கு எது தேவையோ அதை பகுத்தாய்ந்து எடுத்துக் கொள் திராவிட நாட்டை கட்டமைத்த தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன்.

தமிழர்களின் நலன் காக்க திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மிகப் பெரிய இயக்கத்தை தோற்றுவித்து தமிழ்நாடு... ஆம் சென்னை மாகாணத்திற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டி வரலாற்று சாதனை படைத்த பேரறிஞர் அண்ணா, அவர்களை வணங்குகிறேன்.

**தோல்வியே சந்திக்காத சரித்திரத் தலைவர்!**

1957ல் குளித்தலை சட்டமன்ற தொகுதியில் முதல் வெற்றியை தொடங்கி போட்டியிட்ட தேர்தல்களில் எல்லாம் தோல்வியே சந்திக்காத சரித்திரத் தலைவர்.

எதையும் தாங்கும் இதயம் கொண்டு தமிழ்நாடு மக்களின் நலனுக்காக தன்னைத் தந்து ஐந்து முறை தமிழகத்தை ஆண்டு நவீன தமிழ்நாட்டை கட்டமைத்த செயல் மறவர்

13 வது வயதில் தமிழ் கொடி ஏந்தி வாழ்நாள் முழுவதும் இனம், மொழி ஆகியவற்றிற்காக உழைத்து எங்கள் பகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க நாடு பாதி, நங்கவரம் பாதி என உழைக்கும் மக்களுக்காக விவசாயிகளின் போராட்டத்தை முன்னெடுத்து வெற்றிக்கண்ட வரலாற்றுத் தலைவர். பெண்களுக்கு சொத்தில் சம உரிமை, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27% இடஒதுக்கீடு, போன்ற சரித்திர சாதனைகளை படைத்து வங்கக்கடலோரம் ஓய்வெடுக்கும் வரலாற்றுத் தலைவர்... கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கை முழக்கத்தோடு, தமிழ்நாட்டு மக்களின் நலன் காத்திட்ட எங்கள் திராவிட தலைவர் முத்தமிழ் அறிஞரை வணங்குகிறேன். அஞ்சுகத்தாயின் பேரனாய், முத்தமிழ் அறிஞரின் புதல்வனாய் அவதரித்து தமிழகத்திற்கும், தி.மு.க. கழகத்திற்கும் பெரும் இன்னல் வந்த போது, பாயும் புலியாய், சீறும் சிங்கமாய் வில்லிலிருந்து புறப்படும் அம்பாய், தமிழ்காக்க, தமிழர் நலம் காக்க எமர்ஜென்சியை எதிர்த்து போராடி, மிசாவில் சிறைப் படுத்தப் பட்டு மிசாவில் பூத்த மின்னலாய் உருவெடுத்தவர்.

**சரித்திர சாதனைகள் நிகழ்த்திய மு.க.ஸ்டாலின்!**

சட்டமன்ற உறுப்பினராய் சென்னை மாநகர மேயராய், உள்ளாட்சித் துறை அமைச்சராய், துணை முதல்வராய் மகத்தான மக்கள் பணி செய்து உழைப்பால் உயர்ந்த உத்தமர். அதனால் தான் தலைகலைஞர் அவர்களால் ஸ்டாலின் என்றால் உழைப்பு உழைப்பு உழைப்பு என்ற பாராட்டைப் பெற்றார்.

2021ஆம் ஆண்டு மே 7 ஆம் நாள் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான் என்று தமிழ்நாட்டின் முதல் அமைச்சராய் பதவி ஏற்று மகளிர் விடியல்பயணம், கொரானா நிதி 4000, காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வி, தமிழ்புதல்வன், புதுமைப்பெண், மகளிர் உரிமைத்தொகை, இல்லம் தேடி மருத்துவம், உலகம் உள்ளங்கையில், நான் முதல்வன் உட்படபல் வேறு அரிய திட்டங்களைக் கொண்டு வந்து 50 ஆண்டு கால சாதனையை 5 ஆண்டுகளில் செய்து முடித்த வரலாற்று நாயகர், எங்கள் திராவிட பேரரசர் என்றும் மக்கள் மனதில் முதல்வராய் இருக்கும் எங்கள் கழகத் தலைவர் தளபதியார் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.

மேலும் கடைநிலை சாமானிய விவசாய குடும்பத்தில் பிறந்த என்னை குளித்தலை தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பளித்து வெற்றிபெற செய்த தலைவரின் பாதத்தை தொட்டு வணங்கி மீண்டும் ஒரு முறை என் நன்றியை காணிக்கையாக்குகின்றேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், தளபதியார் நால்வரின் மொத்த ஓர் உருவமாய் வடிவெடுத்த எங்கள் எதிர்க் கட்சி தலைவர்.

ஐந்தாம் தலைமுறை திராவிடத் தலைவர்... ஒற்றை செங்கல்லை கையில் எடுத்து தமிழகமெங்கும் உலா வந்து எய்ம்ஸ் மருத்துவமனை நிலையை உலகறிய செய்த எங்கள் இளம் தலைவர் கிராமத்து மாணவர்களையும் விளையாட்டின் மூலம் உலக நாடுகளுக்கு சென்று வெற்றி வாகை சூட வழிவகை செய்தவர் எங்கள் இளைய கலைஞர், அவர்களை வணங்குகிறேன்.

1.5 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தந்து ஐந்தாண்டு காலம் மின்வெட்டு இல்லாமல் தமிழ்நாட்டு மக்களின் நெஞ்சை குளிரச்செய்து, தமிழ்நாட்டை ஒளிரச் செய்த மின் சார்ந்ததுறையின் முன்னாள் அமைச்சர் கழகத் தலைவர், இளைய தலைவர் ஆகியோரின் நம்பிக்கை தமிழ்நாட்டு அரசியலில் திக்கெட்டும் திரும்பும் திசையெல்லாம் தலைவரின் வெற்றி தளபதியாய் முன் நின்று களமாடும் என் நாளும் எங்கள் அமைச்சர் கரூர் மாவட்ட கழக செயலாளர் கழகத் தலைவரின் ஆணையேற்று எங்களை போன்ற எளிய தொண்டர்களை எல்லாம் தேர்தல் களத்தில் வெற்றி பெற வைத்த கோவை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் V.செந்தில் பாலாஜி அவர்களை வணங்குகிறேன்.

என்னுடைய தேர்தல் வெற்றிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்த என்னுடைய வெற்றி தன்னுடைய வெற்றி என்ற உயர்ந்த இலட்சிய எண்ணத்தில் பாடுபட்ட எங்கள் மாவட்ட செயலாளரின் அன்பு இளவல், எனது பாசமிகு அண்ணன் R.V. அசோக்குமார் அவர்களை வணங்கியும் ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டம், தற்போதைய கரூர் மாவட்டம் சூரியனூர் குக் கிராமத்தில் என்னை பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய என் தாய் தந்தை அங்கப்பன்பச்சையம்மாள் அவர்களை வணங்கியும் 1967இல் பிறந்து கிராமப் பள்ளியில் பயின்று, திருச்சி ஜோசப் கல்லூரியில் இளநிலை பட்டமும், சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் முதுநிலைப் பட்டப்படிப்பு பயின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பயணிக்கத் தொடங்கிய நான் 1988 ஆம் ஆண்டு கிளை செயலாளராகவும், சூரியனூர் ஊராட்சி மன்ற தலைவராக இரண்டு முறையும் மக்கள் பணி ஆற்றினேன். கழகத்தில் மாவட்ட பிரதிநிதியாக மூன்று முறையும், பிறகு குளித்தலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளராகவும். 2006 முதல் இன்று வரை குளித்தலை ஒன்றிய கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றேன்.



பொதுவாழ்வில் முழு நேரம் பணியாற்ற எனக்கு உறுதுணையாக இருந்து வரும் மனைவி மேனாள் மாவட்ட கவுன்சிலர் திருமதி.கா.திலகவதிசந்திரன் அவர்களுக்கும் எனது வெற்றிக்கு உடன் பிறப்புகளோடு இணைந்து பிரச்சாரம் செய்த என் அன்புமகள்கள், மருத்துவ கல்லூரி மாணவிகள், ச.மிருணாளினி, ச.ஸ்ருதிரினா ஆகியோரை என் நெஞ்சில் நிறுத்தி...

எனது வெற்றிக்காக பாடுபட்ட அனைத்து கழக நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கழக உடன் பிறப்பு களுக்கும் குளித்தலை தொகுதியில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும், எனது அரசியல் பயணத்தில் என்னோடு துணைநிற்கும் எனது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை இந்த அவையின் வாயிலாக தெரிவித்து கொள்கின்றேன்.

**குளித்தலை தொகுதி கோரிக்கைகள்!**

குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முசிறி குளித்தலை (SH71) 0.350 10.6, 10.6 18.2, 18.2 34/0 வரை உள்ள 34 கிலோ மீட்டர் சாலை கடந்த 10 வருடங்களாக புதுப்பிக்கப் படாமல் உள்ளது. தற்போதைய சாலை போக்குவரத்து நிலையினை கருத்தில் கொண்டு இந்த சாலையினை PAY WOOD SOLIDER உடன் கூடிய இருவழிச் சாலை அமைத்து தரும்படி தொகுதி மக்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டம். குளித்தலை தொகுதிக்கு காவிரி யாற்றின் தென் கரையில் உள்ள மருதூர் கிராமம் திருச்சி மாவட்டம் காவிரி யாற்றின் வடகரையான முசிறி அருகில் உள்ள உமையாள்புரம் இரண்டு பகுதிகளுக்கும் இடைப் பட்ட சுமார் 1200 மீட்டர் அகண்ட காவிரியாற்றின் குறுக்கே தமிழக அரசின் நீர்வளர்துறை மூலமாக இருவழி சாலை வசதி மற்றும் தண்ணீர் ஷட்டர் வசதியுடன் கூடிய கதவணை திறந்துவிடும் தடுப்பணை அமைக்கும் பட்சத்தில் காவிரியில் 1.5 TMC தண்ணீர் சேமித்து வைத்துக் கொள்ள முடியும். குளித்தலை தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**110 கிலோவாட் துணை மின் நிலையம்!**

கரூர் மாவட்டம் குளித்தலை சட்டமன்ற தொகுதி குளித்தலை நகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள மக்கள் தொகை வளர்ச்சி, குடியிருப்பு பகுதிகளின் விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு 110 KVA துணை மின் நிலையம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்ற தொகுதி முழுவதையும் காவிரி டெல்டா மண்டலத்தில் இணைத்து தருமாறு குளித்தலை தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**சார்பதிவாளர் அலுவலகம் அமைத்திடுக!**

கரூர் மாவட்டம் குளித்தலை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட தோகைமலை பகுதியில் புதிய சார்பதிவாளர் அலுவலகம் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை சார்பு நீதிமன்றத்தில், குற்றவியல் நீதிமன்றம் மற்றும் வாழ்க்கை ஜீவனாம்சம் வழக்குகள் நடைபெற்று வந்தது. மேற்கண்ட நீதிமன்றங்கள் தற்போது கரூர் மாவட்ட குடும்பநலநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது இதனால் கரூர் செல்வதற்கு மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். குளித்தலையில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைத்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குளித்தலை சட்டமன்ற தொகுதியில் திராவிட மாடல் ஆட்சியில் 300 உள் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறும் வசதியுடன் கூடிய மிகப்பெரிய மாவட்ட மருத்துவமனை குளித்தலை யில் திறக்கப் பட்டது. மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற வருகின்ற உள் நோயாளிகளை மருத்துவர் பற்றாக்குறையால் வேறு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்து மேல்சிகிச்சைக்கு அனுப்பும் நிலையே உள்ளது. எனவே கூடுதலாக மருத்துவர்கள், செவிலியர்கள், மருந்தாளுநர்கள், லேப் டெக்னீசியன்களை நியமித்து ஏழை மக்கள் சிகிச்சை பெற வழிவகை செய்திடுமாறு குளித்தலை தொகுதி மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**ரயில்வே பாதையில் மேம்பாலம் அமைத்திடுக!**

மணப்பாறை குளித்தலை சாலையில் தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன அந்த சாலையில் உள்ள ரயில்வே கேட் ஒரு நாளைக்கு சராசரியாக 30 முறை மூடப்படுகின்றது அவ்வாறு மூடப்படும் நிமிடங்கள் போது 20 வாகனங்கள் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையில் பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். ஆகவே அந்த ரயில்வே பாதையில் மேம்பாலம் கட்டித்தர வேண்டும்.

குளித்தலை சட்டமன்ற தொகுதியில் குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தில் 13 ஊராட்சிகள். தோகைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள், கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 13 ஊராட்சிகள், மருதூர் பேரூராட்சி, நங்கவரம் பேரூராட்சி மற்றும் குளித்தலை நகராட்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. எனவே, குளித்தலை சட்டமன்ற தொகுதிக்கு என புதியதாக காவிரி கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தி தருமாறு குளித்தலை தொகுதி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகள் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் செயல்பட்டு வருகிறது. இதனால் கிருஷ்ண ராயபுரம் ஒன்றிய அலுவல கத்திற்குச் செல்ல இரண்டு அல்லது மூன்று பேருந்துகள் மாறி மக்கள் சுமார் 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளது. குளித்தலை தொகுதிக்குட்பட்ட இந்த 13 ஊராட்சிகளின் மத்திய பகுதியான பஞ்சப்பட்டி ஊராட்சி பகுதியில் புதிதாக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஏற்படுத்தினால் இந்த ஊராட்சிக்கு உட்பட்ட மக்களுக்கு எளிதாக அலுவல கங்களுக்கு சென்று வர முடியும் தொகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அறிவிப்பு வழங்கியும் புதியதாக ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டடம் அமைக்க வேண்டுமென தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தேவையினை உடனடியாக பூர்த்தி செய்து தருமாறு குளித்தலை சட்டமன்ற தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**கலைஞர் அரசு கல்லூரியில் வகுப்பறைகள் கட்டிட வேண்டும்!**

குளித்தலை அய்யர் மலை டாக்டர் கலைஞர் அரசு கலைக்கல்லூரியில் சுமார் 2000 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இக்கல்லூரியில் போதுமன வகுப்பறை கட்டடங்கள் இல்லாததால் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகள் மிகவும் சிரமத்திற் குள்ளாகின்றனர். இக்கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவிகளின் நலன் கருதி 18 வகுப்பறை கட்டடம் மற்றும் மேற்கூரையுடன் கூடிய கலையரங்கம் கட்டித் தருமாறு தொகுதி மக்களின் சார்பாக தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

1. குளித்தலை வட்டம், தேசியமங்கலம் பேரூர் வரை சுமார் 5 கிலோ மீட்டர் ODR சாலையை MDR சாலையாக தரம் உயர்த்தி தர வேண்டும்.

2. குளித்தலை வட்டம், RT மலை வடசேரி வரை சுமார் 5 கிலோ மீட்டர் ODR சாலையை MDR சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

3.குளித்தலை வட்டம், காவக்காரன்பட்டி - வடசேரி வரை சுமார் 2 கிலோ மீட்டர் ODR சாலையை MDR சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

4. குளித்தலை வட்டம், நங்கவரம் நச்சலூர் வரை சுமார் 6 கிலோமீட்டர் ODR சாலையை MDR சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

5. குளித்தலை வட்டம், RT மலை - புளுதேரி வழியாக திண்டுக்கல் NH புறவழி சாலை வரை உள்ள 5.5 கிலோமீட்டர் ODR சாலையை MDR சாலையாக தரம் உயர்த்த வேண்டும்.

6. இரும்பூதிபட்டி ஜெயங்கொண்டம் சாலை வரை (0/0 கி.மீ முனையனூர் சாலையில் இரும்பூதிபட்டி முதல் பழைய 12/0 கி.மீ) தார்சாலை புதுப்பித்தல். நீளம் 12.00 கி.மீ வரை சாலை அமைக்க வேண்டும் .

குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராய புரம் ஒன்றியத்திற்குட்பட்ட பஞ்சப்பட்டி ஏரி சுமார் 1200 ஏக்கர் பரப்பளவில் தமிழகத்தில் உள்ள ஏரிகளில் இரண்டாவது பெரிய ஏரியாக உள்ளது. இதற்கு மழை காலங்களில் காவேரி ஆற்றில் வரும் வெள்ள உபரி நீரினை உயர் அழுத்த மின்மோட்டார் மூலம் பம்பு செய்த ஏரியை நிரப்புவதற்குரிய திட்டத்தினை செய்து கொடுக்க வேண்டுமென தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

**கால்நடை மருத்துவமனை அமைத்திடுக!**

குளித்தலை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திம்மம்பட்டி ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு மருத்துவமனையும், தோகைமலை ஒன்றியம். நெய்த லூர் ஊராட்சி பனையூரில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

1. நச்சலூர் முதல் நல்லூர் சாலையில் கட்டளை மேட்டு வாய்க்காலின் குறுக்கே அமைந்துள்ள குறுகிய பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்களும், பணிக்கம் பட்டி மருதூர் சாலையில் கட்டளை மேட்டு வாய்க்காலின் குறுக்கே உள்ள இரண்டு பாலங்களுக்கு பதிலாக புதிய பாலங்கள் இரண்டு கட்டித்தர வேண்டும் .


இவ்வாறு சூரியனூர் அ. சந்திரன் பேசினார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அ.சி.இளங்கோவன் (எ) ஏழுமலை

### ஆகஸ்ட் 25 (2016)



**ஒருங்கிணைந்த செங்கை–அண்ணா மாவட்டத்தில் உள்ள வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**இவர், அரசுப் பள்ளியில் தலைமையாசிரியராக பணியாற்றிக் கொண்டிந்தபோது, துறையின் பல்வேறு நடவடிக்கைகளையும் மீறி கழகம் அறிவித்த ஆர்ப்பாட்டம், போராட்டங்களில் பங்கு கொண்டார்.**

**இவர் ஒன்றியச் செயலாளராக இருந்தபோது, சைக்கிளிலேயே பயணம் செய்து கழகத்தை வளர்த்துடன், இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு போன்ற கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## தமிழ்நாட்டில் 4,208 நீர்நிலைகளில் நீர் இல்லை!

# காவிரி டெல்டாவில் குடிநீர், பாசனத்திற்கு கடும் நெருக்கடி!

### குடிநீருக்காக அலையும் மக்கள்!

சென்னை, ஆக. 25–
தமிழ்நாட்டில் 4208 நீர்நிலைகள் முற்றிலும் வறண்டுள்ளது. காவிரி டெல்டா பகுதிகளில் குடிநீர், பாசனத்திற்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனால் ஆழ்குழாய் கிணறுகளை ஆழப்படுத்தும் பணியில் விவசாயிகள் இறங்கியுள்ளனர். தமிழகத்தில் பருவமழை பொய்த்ததாலும், கோடை வெப்பத்தின் தாக்கம் அதிகரித்ததால் நீர்நிலைகளில் நீர் இருப்பு கடுமையாக சரிந்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 14,141 நீர்நிலைகளில் 4,208 நீர்நிலைகள் முற்றிலும் வறண்டுள்ளது.

மேலும் 5,814 நீர்நிலைகளில் 1 முதல் 25 சதவீதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் 10,000க்கும் மேற்பட்ட நீர்நிலைகளில் நீர் இருப்பு குறைந்துள்ளது. நீர்வளத்துறை பராமரிப்பில் உள்ள 14,141 நீர்நிலைகளில் மதுரை மாவட்டத்தில் மட்டும் 1,340 நீர்நிலைகள் உள்ளன. அதில் 1,123 நீர்நிலைகள் முற்றிலும் வறண்டுள்ளன. இதே போல் பல மாவட்டங்களிலும் ஏரிகள், குளங்கள் மற்றும் பாசனத் தொட்டிகள் நீரின்றி காணப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் புதுக்கோட்டை ஆகிய காவிரி டெல்டா மாவட்டங்களில் நிலைமை இன்னும் மோசமாக உள்ளது. இந்தப் பகுதியில் நீர்வளத்துறையின் பராமரிப்பில் 737 நீர்நிலைகள் உள்ளன. இவற்றில் 694 நீர்நிலைகளுக்கு அணைக்கட்டு கால்வாய் மூலமாகவும், 41 நீர்நிலைகளுக்கு வெண்ணாறு மூலமாகவும், 2 நீர்நிலைகளுக்கு காவிரி ஆறு மூலமாகவும் தண்ணீர் கிடைக்கிறது. இதுதவிர 27 அமைப்பு சாரா நீர்நிலைகளும் உள்ளன.

கடந்த ஆகஸ்ட் 7ம் தேதி நிலவரப்படி, டெல்டா மாவட்டங்களில் உள்ள 764 நீர்நிலைகளில் 720 நீர்நிலைகள் முற்றிலும் வறண்டு காணப்பட்டன. கடந்த ஆண்டு இதே நாளில் வெறும் 24 நீர்நிலைகளில் மட்டுமே தண்ணீர் இன்றி காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 720ஆக உயர்ந்துள்ளது. மேலும், இந்த 764 நீர்நிலைகளில் 50 சதவீதத்துக்கும் அதிகமான நீர் இருப்பு கொண்ட ஒரு நீர்நிலையும் இல்லை. ஒரே ஒரு நீர்நிலையில் மட்டும் 25 முதல் 50 சதவீதம் வரை நீர் இருப்பு உள்ளது. 43 நீர்நிலைகளில் 25 சதவீதத்துக்கும் குறைவான நீரே உள்ளது.

டெல்டா பகுதியில் உள்ள 764 நீர்நிலைகளின் மொத்த கொள்ளளவு 6.7 டிஎம்சி. ஆனால் தற்போது அதில் 0.176 டிஎம்சி அளவு மட்டுமே தண்ணீர் உள்ளது. அதாவது, மொத்த கொள்ளளவில் வெறும் 2.62 சதவீதம் மட்டுமே நீர் இருப்பு உள்ளது. டெல்டா பகுதியில் உள்ள நீர்நிலைகள் வெறும் பாசன ஆதாரங்களாக மட்டுமல்லாமல், நிலத்தடி நீரைச் சேமித்து வைக்கும் முக்கிய ஆதாரங்களாகவும் உள்ளன. குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் ஏரிகள், குளங்கள் வறண்டுள்ளதால் நிலத்தடி நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

அதிலும் பட்டுக்கோட்டை முதல் சேதுபாவாசத்திரம் வரையிலான பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. நெல் உற்பத்தியின் முக்கிய மையமாக விளங்கும் காவிரி டெல்டா பகுதியில், மேட்டூர் அணையில் இருந்து ஜூன் 12ம் தேதி வழக்கம்போல் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படாததும், கர்நாடகத்திலிருந்து காவிரி நீர் வரத்து தாமதமானதும் நீர்நிலைகள் வறட்சிக்கு முக்கிய காரணம் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: பல கிராமங்களில் சுமார் 180 அடி ஆழத்தில் கிடைத்த நிலத்தடி நீர் தற்போது 210 அடி வரை கீழிறங்கியுள்ளது. பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகளை மேலும் ஆழப்படுத்தி வருகின்றனர். நீர்நிலைகள் வறண்டதாலும் ஆறுகள், கால்வாய்கள் வழியாக கிடைக்கும் பாசன நீரை நம்பியிருந்த விவசாயிகள் தற்போது நிலத்தடி நீரை நாட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளை மேலும் ஆழப்படுத்த வேண்டியுள்ளது. இதனால் துளையிடும் செலவு, மோட்டார் மற்றும் மின் உபகரணங்களுக்கான செலவு என தொடர்ந்து பொருளாதாரச் சுமை அதிகரித்து கொண்டே வருகிறது.

நிலத்தடி நீர் மேலும் கீழிறங்கினால் தற்போதைய ஆழ்குழாய் கிணறுகளும் பயனற்றுப் போகும் அபாயம் உள்ளது. மேலும் கால்நடைகளை வளர்க்கும் விவசாயிகள் தங்கள் மாடுகளுக்கு குடிநீர் கிடைக்கும் இடங்களைத் தேடி தொலைதூர பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடைகளை பராமரிப்பதற்கான நேரமும் செலவும் அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

* கடந்த ஆண்டு இதே நாளில் வெறும் 24 நீர்நிலைகளில் மட்டுமே தண்ணீர் இன்றி காணப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 720ஆக உயர்ந்துள்ளது